**சார்பு நீதிமன்றம், துறையூர்.**

**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**சார்பு நீதிபதி,**
**துறையூர்.**

**OS.No.13/2023**

தேதி: 15.09.2025

பெயர் : அனுசியா (வா.சா.1) க/பெ: குலோத்துங்கன்

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்குவிசாரணை தொடர்ச்சி**

1. என் மாமனார் ரெங்கசாமி எந்த தேதி இறந்தார் என்றால் 04.04.2021 ல் இறந்தார். அவர் செங்காட்டுப்பட்டியில் இறந்தார். அவர் இறந்த சமயத்தில் நான் கோயம்புத்தூரில் வசித்து வந்தேன். இறந்த காரியத்திற்கு நான் வந்தேன். அதற்கு பாதி செலவு நான் செய்தேன். என் மாமியார் பெயர் ராஜம்மாள். அவர் 2009 ல் இறந்தார். அவர் இறக்கும்போதும் நான் வந்திருந்தேன். இறந்த காரியத்திற்கு செலவு செய்ததை காட்ட ஆவணம் தாக்கல் செய்துள்ள விவரத்தை எனது வழக்குரையில் தெரிவித்து அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என் மாமனாருக்கு தாவாசொத்து எப்படி கிடைத்தது என்றால் 1956 ல் தாய்வழி தாத்தா நல்லப்பரெட்டியார் இனாம் சாசன பத்திரம் மூலமாக என் மாமனாருக்கு கொடுத்தார். ரெங்கசாமி ரெட்டியாருக்கும், ராஜம்மாளுக்கும் மொத்தம் 5 குழந்தைகள். அவர்கள் குலோத்துங்கன், மணிமேகலை, பிரேமா, ரகுபதி, பசுபதி ஆகும். அதில் பசுபதி இறந்துவிட்டார். அவர் 2005 ல் இறந்தார். ரெங்கசாமி இறப்பதற்கு முன்பு இறந்துவிட்டார். என் கணவர் குலோத்துங்கனும் ரெங்கசாமி இறப்பதற்கு முன்பு இறந்தார். என் கணவர் 24.05.2013 ல் இறந்தார். மணிமேகலை 27.03.2012 ல் ரெங்கசாமி இறப்பதற்கு முன்பு இறந்தார். என் கணவர் குலோத்துங்கன் என் மாமனார் ரெங்கசாமிக்கு பதிவு செய்யப்பட்ட பாக விடுதலைப்பத்திரம் எழுதிக் கொடுத்தவிவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் என் திருமணத்திற்கு பிறகு 2-3 ஆண்டுகள் கழித்து தெரியும். அந்த பத்திரத்தை என் கணவர் 2002 ல் ரத்து செய்துவிட்டார். அந்த பத்திரத்தை ரத்து செய்ய என் மாமியார், கொழுந்தனார் ரகுபதி ஆகியோர் வந்து கையெழுத்து செய்து ரத்து செய்தனர்.

2. என் கணவர் 1982ல் எழுதிக்கொடுத்த பாக விடுதலைப்பத்திரத்தை 20 ஆண்டுகள் கழித்து 2002ல் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் ரெங்கசாமி ரெட்டியார் எந்த கையெழுத்தும் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரம் எழுதும்போது ரெங்கசாமி ரெட்டியாருக்கு தெரியாது என்றால் சரியல்ல. அவருக்கு தெரியும். என் மாமியார் ராஜம்மாள் எழுதிய கடிதத்தை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.19 என் மாமியார் எழுதிய கடிதம், அதில் உள்ள கையெழுத்து என் மாமியாருடையது என்றால் சரிதான். அவர் தமிழிலும், ஆங்கிலத்திலும் கையெழுத்து போடுவார். இதைத்தவிர வேறு எந்த ஆவணங்களில் என் மாமியார் தமிழிலும், ஆங்கிலத்திலும் கையெழுத்து போட்டுள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் நிறைய கடிதங்கள் கொடுத்துள்ளேன். என் மாமியார் எழுதிய கடிதம் என ஒரு கடிதம் மட்டும் தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னுடைய வாக்குமூலத்துடன் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.12 முதல் வா.சா.ஆ.25 வரை உள்ள ஆவணங்கள் பற்றி என்னுடைய அறிவிப்பு மற்றும் வழக்குரை, பதில் வழக்குரை ஆகியவற்றில் சொல்லவில்லை என்றால் சரிதான். என் கணவர் என்னை திருமணம் செய்துக்கொண்டதற்கான திருமண பத்திரிக்கை, திருமணத்தின்போது எடுத்த புகைப்படம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.25 புகைப்படம் எப்போது, எங்கு எடுத்தது, அதற்கான பில் நெகட்டிவ் நான் தாக்கல் செய்யாததால் மேற்படி ஆவணம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.24 தாக்கல் செய்துள்ள பாஸ்புத்தகம் அடிப்படையில் வழக்கு சொத்தில் எங்களுக்கு பாகம் உள்ளது என சொல்ல முடியாது என்றால் சரியல்ல. இந்த ஆவணத்தை எந்த காரணத்திற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் என் கணவர் கூட்டுக்குடும்பமாக அந்த விலாசத்தில் குடியிருந்தார் என்பதை காட்ட தாக்கல் செய்துள்ளேன். இந்த ஆவணத்தில் 2004க்கு பிறகு வரவு செலவுகள் இல்லை என்றால் சரிதான், நாங்கள் கோயம்புத்தூர் சென்றுவிட்டோம். அதனால் செய்யவில்லை.

3. வா.சா.ஆ.23ல் உள்ள புகைப்படம் எப்போது, எங்கு எடுத்தது என்ற விவரம் வழக்குரையில் சொல்லவில்லை என்பதாலும், அதற்கான பில் நெகட்டிவ் நான் தாக்கல் செய்யாததாலும் மேற்படி ஆவணம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. புகைப்படம் எங்கள் வீட்டில் எடுத்தது. புகைப்படம் செங்காட்டுப்பட்டி வீட்டில் தான் எடுத்தது என்பதை காட்ட வீட்டின் கதவு எண் மற்றும் வீட்டின் புகைப்படம் இல்லை என்றால் சரிதான். என்னுடைய வாக்குமூலத்தில் புகைப்படம்

செங்காட்டுப்பட்டி வீட்டில் எடுத்தது என கூறவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.21ல் 1ம் பிரதிவாதி எழுதிய கடிதத்தில் வழக்கு சொத்தை பொறுத்து எந்தவித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.20ல் 1ம் பிரதிவாதி எழுதிய கடிதத்தில் வழக்கு சொத்தை பொறுத்து எந்தவித குறிப்பும் இல்லை என்றால் சரிதான். என் கணவர் செல்போன் எண் எனக்கு நினைவு இல்லை. என் கணவருக்கு கோயம்புத்தூர் ICICI வங்கியில் கணக்கு இருந்ததா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காட்டப்படும் காசோலையில் உள்ள கையெழுத்து என் கணவருடையதா என்றால் இல்லை. காசோலையில் உள்ள வங்கி கணக்கு எண் என் கணவருடையதா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் புரோநோட்டில் உள்ள கையெழுத்து என் கணவருடையதா என்றால் இல்லை. என் கணவருக்கு 1ம் பிரதிவாதி கடனாக வாங்கி கொடுத்த தொகைக்கு தான் பணம்கொடுப்பது சம்மந்தமாக 1ம் பிரதிவாதி கடிதம் அனுப்பப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு 1ம் பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பினாரா என்றால் அனுப்பினார். ரெங்கசாமி ரெட்டியார் 1ம் பிரதிவாதிக்கு எழுதிய உயிலை பற்றியும், என் கணவர் ரூ.1000/- பெற்றுக்கொண்டு பாக விடுதலைப்பத்திரம் எழுதிக்கொடுத்த விவரத்தையும் பதில்அறிவிப்பில் கூறியுள்ளார் என்றால் இல்லை.

4. வா.சா.ஆ.6 பதில்அறிவிப்பு பத்தி 4ல் என் கணவர் எழுதிக்கொடுத்த விடுதலைப்பத்திரம் பற்றியும், ரெங்கசாமி ரெட்டியார் எழுதிய உயில் பற்றியும் குறிப்பிட்டுள்ளார், ஆனால் நாங்கள் அது குறித்து எவ்வித பரிகாரமும் வழக்கில் கேட்கவில்லை என்றால் கேட்டுள்ளோம். என்ன பரிகாரம் கேட்டுள்ளோம் என்றால் சொத்தில் பாகம் கேட்டுள்ளோம். உயில் மற்றும் பாக விடுதலைப் பற்றி குறிப்பாக எந்த பரிகாரமும் கேட்கவில்லை. வா.சா.ஆ.11 பாக விடுதலை ரத்துப்பத்திரத்தை ரத்து செய்வதற்கு என் கணவருக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.11ல் சாட்சி கையெழுத்து போட்டுள்ளது ராஜம்மாள் இல்லை எனவும், 1ம் பிரதிவாதியும் இல்லை என்றால்சரியல்ல. வா.சா.ஆ.19க்கும், வா.சா.ஆ.11ல் உள்ள ராஜம்மாளின் கையெழுத்தும் வெவ்வேறானது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்கு பட்டா யார்பெயரில் இருந்தது என்றால் என் மாமனார் பெயரில் இருந்தது. என் மாமனார் பெயரில் இருந்ததை காட்ட வருவாய் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கான பட்டா நாரயணசாமி மகன் ரங்கசாமி பெயரில் இருந்தது என்றால் சரிதான். அந்த சமயத்தில் வழக்கு சொத்து என் மாமனார் பெயரில் இல்லை என்றால் சரியல்ல. 1ம்

பிரதிவாதி தான் அந்த தவறுகளை திருத்த தகுந்த ஆவணங்கள் தாக்கல் செய்து வருவாய்துறையில் மாற்றினார் என்றால் இல்லை. என் கணவருக்கு நான் தான் முதல் தாரம் என காட்ட ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என்ன ஆதாரம் தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடிதங்களை தாக்கல் செய்துள்ளேன். திருமண சான்றிதழோ அல்லது வருவாய் துறை மூலம் வாங்கிய திருமண சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதுபோன்ற என் கைவசம் இல்லை.

5. வழக்கு சொத்து ரெங்கசாமி ரெட்டியாருக்கு அவருடைய தாய்வழி பாட்டனார் தானம் மூலமாக எழுதி வைத்த சொத்து என்பதால் அந்த சொத்து அவருடைய தனிப்பட்ட சொத்து எனவும், அதில் பங்கு கேட்க எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. ரெங்கசாமி இறப்பதற்கு முன்பே என் கணவர் இறந்து விட்டதால் எனக்கும், என் வாரிசுக்கும் அதில் பங்கு கேட்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. போனில் பேசிய உரையாடலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் அனுப்பிய அறிவிப்பிற்கு பிரதிவாதி சரியான பதில்அறிவிப்பு அனுப்பியுள்ளார் எனவும், அதனை மறைத்து வழக்குரை மற்றும் வாக்குமூலத்தில் சொல்லாமல் நீதிமன்றத்தில் ஆவணங்கள் மட்டும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பதில் வழக்குரையில் சொல்லியுள்ளேன். அந்த உயில் பொய்யான உயில் ஆகும். வழக்குரையில் பதில் அறிவிப்பில் தெரிவித்துள்ள விவரம் தவறு என சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி பதிலுரையுடன் பதிவு செய்யப்படாத உயில் ஆவணத்தை தாக்கல் செய்துள்ளார், அதனை வாங்கி படித்துப்பார்த்தேனா என்றால் படித்துப்பார்த்தேன். அதில் என்ன எழுதியுள்ளது என்றால் கண்ணாடி இல்லாமல் படிக்க முடியாது. நான் பாகம் கேட்டு தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு எனக்கு பாக உரிமையில்லாததால் தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.